பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6 00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 19 திங்கட்கிழமை (01-04-1996) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 126

# கரும் புலிகளால் "டோறா" படகே மூழ்கடிப்பு!

சாவகச்சேரி, ஏப். 1

கடற்புலிகளின் தாக்குதல் படையணிகளான சாள்ஸ் படையணி, நளாயினி படையணி, நரேஷ் படையணி ஆகியவற்றுடன் இணைந்து கடற்கரும்புலிகள் நேற்று முன்தினம் நண்பகல் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா கடற்படையின் அதிவேகத் தாக்குதல் கலமான டோறா படகே மூழ்கடிக்கப்பட்டது.

சுண்டிக்குளம் கடற்பரப்பில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட பத்து கடற்படையினர் உயிரிழந்ததாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இத் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 14 கடற்படையினர் உயிரிழந்ததாகவும், ஓர் அதிகாரி உட்பட ஐந்து கடற்படையினர் காயமுற்றதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டன.

காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில் இருந்து திருகோணமலை துறைமுகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த — எல். சி. எம் தரையிறக்குக் கப்பல்கள் இரண்டு, ஜே. பி. பீரங்கிப் படகுகள் இரண்டு, டோறாக்கள் நான்கு ஆகியவை அடங்கிய — கடற்படைட் அணி மீதே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 21 வேங்கைகள் வீரச்சாவு

சாவகச்சேரி, ஏப். 1

கடற்படையினரின் கப்பல் தொடர் அணி ஒன்றை வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் வழிமறித்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குதலில் இரு கரும்புலிகள் உடபட 21 வேங்கைகள் வீர மரணமடைந்தனர்.

வீர மரணமடைந்த வேங்கைகள் விவரம் வருமாறு:-

★ கரும்புலி மேஜர் ஜெகநாதன் (சங்கரப்பிள்ளை தவராசா — பூநகரி)

★ கரும்புலி கப்டன் இளை

(5 ஆம் பக்கம் பார்க்க)

# படை நடவடிக்கை வலிகாமத்திலேயே!

## வடமராட்சி, தென்மராட்சியில் நடப்பதற்கு வாய்ப்பில்லையாம்

கொழும்பு, ஏப்ரல் 1

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடுத்த படை நடவடிக்கை ஏப்ரல் நடுப்பகுதிக்கு முன்னர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

படையினரால் கைப்பற்றப்பட்ட வலிகாமம் பகுதியிலிருந்து முற்றாக விடுதலைப் புலிகளை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையே உடனடியாக ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பில் செய்தி ஏஜென்ஸிகள் பலவும் நேற்று இத்தகவலை வெளியிட்டன.

வெற்றிலைக் கேணிக் கடற்பரப்பில் கடற் படையின் 'டோறா' படகை விடுதலைப் புலிகள் மூழ்கடித்த பின்னர் அது பற்றிய செய்தியை வெளியிட்ட போதே செய்திஏஜென்ஸிகள் இவ்வாறு தகவல் தெரிவித்தன.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆனியும், பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸும், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்காவை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மூப்பனார் அணி - தி.மு.க. தேர்தலில் கூட்டணி!

## ரஜனிகாந்தும் அதற்கு ஆதரவு

எதிர்வரும் தேர்தலில் தமிழகத்தில் அ. தி. மு. கவுடன் கூட்டணி அமைப்பது என்று காங்கிரஸ் தலைமைப்பீடம் எடுத்த முடிவினால் சீற்றம் அடைந்திருந்த காங்கிரஸ் கட்சியின் தமிழகப் பிரிவினர் —

கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான கருப்பையா மூப்பனார் தலைமையில் தனி அணியாகப் பிரிந்து சென்று தி. மு. கவுடன் தேர்தல் கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

இதன்படி—

காங்கிரஸின் மூப்பனார் பிரிவு 40 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும், நாடாளுமன்றத்துக்கு தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள 40 தொகுதிகளில் 20 தொகுதிகளிலும் போட்டியிடும்.

இத்தகவலை தி. மு. க. தலைவர் கருணாநிதியும், கருப்பையா மூப்பனாரும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் நோக்கத்தை எட்டவே யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டது

## இராணுவ நெருக்கடி குறித்து விமரிசனம்

கொழும்பு, ஏப். 1

அரசாங்கப் படைகள் கடந்த வருட இறுதியில் மேற்கொண்ட 'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கை அரசியல் இலக்கை மட்டுமே கொண்டிருந்தது.

அதனால் யாழ். நகரைக் கைப்பற்றி, சிங்களவர்களின் உணர்ச்சி ஊறிய ஆதரவைப் பெறும் நோக்குடனேயே அந்த வெற்றி ஈட்டப்பட்டது.

அதனால் வலிகாமத்தின் கிழக்குப் பக்கத்தால் மட்டும் படை நகர்வை நடத்தியதோடு இராணுவம் நிறுத்திக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மதவாச்சியில் மக்களை தாக்கிய இராணுவத்தினர்!

## 19 படையினர் பொலீஸாரால் கைது

மதவாச்சியில் இளைஞர் ஒருவருக்கும் சிப்பாய் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு ஒன்றை அடுத்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மடுகந்த பகுதி இராணுவத்தினர் அப்பகுதி மக்களைத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தை அடுத்து மடுகந்த இராணுவ முகாமை சேர்ந்த சார்ஜன்ட் மேஜர் ஒருவர் உட்பட 19 இராணுவத்தினர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (உ-3)

## முல்லையில் நேற்றும் குண்டு வீச்சு

நேற்றும் காலை 9. 15 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ''சுப்பசொனிக்'' விமானத் தாக்குதல் இடம்பெற்றது. நேற்று முன்தினமும் அங்கு ''சுப்ப சொனிக்'' தாக்குதல் இடம்பெற்றது தெரிந்ததே. (உ-8)

# மட்டு. மயிலங்கரைச்சையில் மூன்று ராணுவத்தினர் பலி!

மட்டக்களப்பு மாவட்டம் மயிலங்கரைச்சைப் பகுதியில் வீதித் தடைகளை அகற்ற வந்த படையினர் மீது நேற்றுக்காலை 7 மணிக்கு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகக் கட்சிகளுக்கு விடுதலைப் புலிகள் கடிதம்

தமிழகத்தில் தேர்தலில் மும்முரமாக இறங்கியுள்ள தமிழக அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக பி. பி. ஸி. அறிவித்தது.

இலங்கையில் அகதிகளாக அவதிப்படும் தமிழ் மக்களின் நிலையைச் சுட்டிக் காட்டி, இலங்கை இராணுவம் புதியதொரு தாக்குதலுக்கு தயாராகி வருவதாகத் தெரிவித்து, அதனின்றும் தமிழ் மக்களை காக்க தமிழக அரசியல் கட்சிகள் குரல் கொடுக்க வேண்டும் என்று அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாக பி. பி. ஸி குறிப்பிட்டது. (உ-3)

## ஏப்ரல் முட்டாள் தினம் இன்று

இன்று ஏப்ரல் முட்டாள் தினம், உங்களின் நண்பர்கள், நெருங்கியவர்கள் உங்களை முட்டாளாக்க முயற்சிக்கக் கூடும். அவதானமாக இருங்கள்.

## மூவர் சுட்டுக்கொலை

சாவகச்சேரி, ஏப். 1

நேற்றுக் காலை 7 மணியளவில் வாழைச்சேனைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றை அடுத்து 3 பொதுமக்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-3)

## புளொட் உறுப்பினரும் சிப்பாயும் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேனைக் குடியிருப்பு பகுதியில் நேற்றுக். காலை 10 மணிக்கு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவரும், புளொட் அமைப்பு உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டனர் மற்றொரு சிப்பாய் காயமடைந்தார். (உ-3)

# தொடர்ந்து ஷெல் வீச்சு!

வலிகாமம் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளை நோக்கி நேற்றும் முன்தினம் இரவும் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு 9-45 மணிக்கு ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் வான்பரப்பில் வெடித்து பேரிரைச்சலுடன் சென்று வடமராட்சி கிழக்கு கடற்பிராந்தியத்தில் விழுந்தது.

அதிகாலையும், காலையும் ஏவிப ஷெல்கள் தொண்டமானாறு, கெருடாவில் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

நேற்று அதிகாலை 1 மணி

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி -- நுணாவில் கிழக்கு
(வைரவர் கோவில் என வழங்கும்)

## அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோவில்

## மகோற்சவ விழா

தேர்த் திருவிழா — **2 - 4 - 96** காலை **9** மணி
தீர்த்தத் திருவிழா — **3 - 4 - 96** காலை **9** மணி

அடியார்கள் வருகை தந்து எம் பெருமானின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

நா. இராமச்சந்திர ஐயர்,
(ஆலய பரிபாலகர்)

[41139]



## எம். கே. எஸ். வைத்தியசாலை
## M. K. S. MEDICAL CLINIC

யாழ். குடாநாட்டில்
கே. கே. எஸ் வீதி, 3ம் கட்டை, கொக்குவில்—
கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.
ஆகிய இடங்களில் இயங்கிய மேற்படி ஸ்தாபனம்

**03 — 04 — 1996** புதன் முதல்

**யாழ். வீதி, கிளிநொச்சியில்**
(சிவா வர்த்தக நிலையம் அருகில்)
தனது சேவையை ஆரம்பிக்கின்றது

குறிப்பு: முன் போல் சகலவிதமான மருத்துவ ஆய்வு கூட பரிசோதனைகளும் செய்து கொள்ளலாம்.

டாக்டர் மு. கனகசபை
C. M. C. Reg. No. 1481

(40489)



## சிவாகி
## கல்வி நிலையம்

சிவன் வீதி, சாவகச்சேரி

**A/L 96, 96 மீட்டல், 97**

**கலை, வர்த்தக வகுப்புக்கள்**

ஆரம்பம்:- **96 — 04 — 02** செவ்வாய்
பி. ப. 3 மணி

| | |
|---|---|
| பொருளியல்;- | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல்:- | திரு. கொலின் |
| வர்த்தகம்;- | திரு. வரதன் |
| புவியியல்:- | திரு. நித்தி |
| புள்ளிவிவரவியல்:- | திரு. சிறி |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் / தமிழ் | திரு. கமலநாதன் |
| அளவையியல்;- | திரு. சர்மா |
| அரசியல்:- | திரு. பொன் சந்துரு |
| நாடகமும் அரங்கியலும்:- | திரு. சத்தியா |
| கிறிஸ்தவம்:- | பிரபல ஆசிரியர் |

(41150)



## தபால் மூலம் ஆங்கிலக் கல்வி
## POSTAL ENGLISH TUITION
SPOKEN ENGLISH WITH GRAMMAR

பயிற்சி நெறியைப் பூரணப்படுத்தியவர்களுக்கு பல ஆங்கிலச் சொற்கள் — உரையாடல்கள் அடங்கிய ''ஒலிநாடா'' (Audio Cassette) பெற ஒழுங்கு செய்யப்படும்.

★ வீட்டில் இருந்தவாறே கற்கலாம்.
★ நவீன அமெரிக்க முறையை அனுசரித்த பாடத் திட்டங்கள்.
★ பூரணமான தமிழ் விளக்கங்கள்
★ பூரணமான ஆங்கில உச்சரிப்பு முறைகள்.
★ பூரணமான ஆங்கில இலக்கணம் (English Grammar).
★ ஆங்கில உரையாடல் பாடங்கள் (Conversation)
★ பாடசாலை மாணவர்கள்-பல்கலைக்கழக மாணவர்கள் பயன் பெறலாம்.
★ அரசாங்க - தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

நேரில் தொடர்புகொண்டு அல்லது ரூபா 10-50 முத்திரையொட்டிய சுயவிலாசமிட்ட கடித உறை அனுப்பி விவரம் அறியலாம். கடிதத் தொடர்புகள் ''பதிவுத் தபால்'' மூலம் செய்வது விரும்பத்தக்கது.

எமது விலாசம்:

**APOLLO PUBLISHING HOUSE**
S. V. T. V. CENTRE OF
JAFFNA TECHNICAL INSTITUTE,
யாழ். வீதி, கொடிகாமம்.
(மேல் மாடியில்)

[41277)


## தமிழ்ப் பெண்கள் மூவர் கைது

கொழும்பு, ஏப் 1

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பில் மூன்று தமிழ்ப் பெண்கள் கைதுசெய்யப்பட்டு நாரஹேன்பிட்டி பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்ட இவர்கள் வெளிநாடு செல்வதற்காக கொழும்புக்கு வந்து நாரஹேன்பிட்டி தொடர்மாடியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஆய்வு கூட உதவியாளர் பதவிகள்

கொழும்பு, ஏப். 1

கல்விக்கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் தேசிய பாடசாலைகளின் ஆகியவற்றில் இரண்டாம் தர இரசாயனகூட உதவியாளர் பதவிகளுக்குஆட்சேர்ப்பதற்கு கல்விச்சேவைக்குழு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

விண்ணப்பமுடிவு திகதி இம்மாதம் 29ஆம் திகதியாகும். (உ-3)

## கோப்பாய் கல்விக் கோட்ட அதிபர் கூட்டம்

சாவகச்சேரி, ஏப். 1

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-8)

## கட்டுநிதி வந்தது

வடமராட்சி, ஏப். 1

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு மார்ச் மாத சம்பளப் பணத்துக்கான கட்டுநிதி யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரினால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது. (உ-173)

## தமிழீழ வானொலி

திங்கள் மாலை

★ 5-00 — ஆரம்பம் — சிந்தனைச் சிதறல்
• 5-02 — எழுச்சி கீதம்
★ 5-10 — அலையோசை
★ 5-30 — போர் முரசு
★ 6-00 புதியவை
★ 6-10 — செய்திகள்
★ 6-15— ஓர் இசை நாடாப் பாடல்
★ 6-30—ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

திங்கள் இரவு

★ 8-00 —ஆரம்பம்
★ 8-02 — தளிர்கள்
★ 8-20 — கணப்பொழுது
★ 8-30 — செய்திகள்
★ 8-40 —அறிவிப்புக்களைத் தொடர்ந்து 9-00 மணி வரை தாயகப் பாடல்கள்

செவ்வாய் காலை

★ 7-00 — ஆரம்பம்
★ 7-02 மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 மணி வரை இன்றைய தாரகை
★ 7-30 செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — அறிவிப்புகள் தொடர்ந்து 8-00 மணி


உ
கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ நாகபூசணி அம்பாள்

## தீர்த்த உற்சவ தினம்
## நாளை (02 - 04 - 96)

அம்பிகை அடியார்களே!

அன்னையின் ஆலயம் இருள் சூழ்ந்து இருந்தாலும் அம்பாளின் அருள் என்றும் இருள் சூழ்ந்ததல்ல. அடியார்களின் அன்பும் பக்தியும் மறைந்ததும் அல்ல. ஆகவே அடியார்களே! அம்பாளின் தீர்த்த உற்சவமாகிய 02. 04. 96 செவ்வாய்க்கிழமை பசுபதி வீதி, மறவன்புலோ மத்தியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அஷ்டோத்திர சங்காபிஷேகமும் விசேஷ பூசைகளும் நடைபெறும்.

அத்தினம் கோண்டாவில் கிழக்கு மக்களும், ஏனைய அடியார்களும், உபயகாரர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அம்பாளின் அருள் கடாட்சத்தை பெற்று ஏகும் வண்ணம் வேண்டுகிறோம்.

அடியார்கள் பால், இளநீர், பூக்கள் போன்றவற்றை சார்ப்பிக்கவும்.

காலை **9** மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பம்.

இங்ஙனம்:
நிர்வாக சபையினரும்
ஆலய பூசகரும் (நா. பூ. அ.)

(41279)



## MATHS CENTRE இல்
## BECON கல்வி நிறுவனம்

**A/L 95 (மீட்டல்) '96, 97**

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| அளவையியல் / புள்ளி விவரவியல்:- | — ] | திரு. S.S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு. பா. சண் |
| தமிழ் | — | திருமதி. அ. மீரா |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — ] | திரு. பாலா |

**ஆரம்பம்: 3 - 4 - 96** புதன் பி. ப. 3-00

பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்
**10-00** A.M. — **2-00** P.M.

(40403)



## கலைமகள்
## கல்விநிலையம்
## சரசாலை
**ஆண்டு 4 முதல் O/L வரை**

யாழ்., வடமராட்சி, தென்மராட்சி முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.

| | | |
|---|---|---|
| கணிதம் | : | திரு. த. நித்தியானந்தம் |
| விஞ்ஞானம் | : | திரு. ச. லவீசன், திரு. ப. பரமேஸ்வரன், திரு. சி. ஈசன் |
| தமிழ் | : | திரு. அ. ஆர்த்திகன், திரு. T. வேல்நம்பி, திரு. க. நித்தி |
| சமூகக்கல்வி | : | திரு. ச. கிருஷ்ணன், திரு. க. கோபி, திரு. வை. நாகநாதன், திரு. சி. ஈசன் |
| ஆங்கிலம் | : | திரு. அ. நிஷாந்தன், திரு. S. சத்தியமூர்த்தி, திரு. வை. விஜயகுமாரன் |
| வர்த்தகம் | : | திரு. ந. சிவானந்தம், திரு. த. ஜெபதாஸ் |
| விவசாயம் | : | திரு. ச. லவீசன் |
| சமயம் | : | திரு. சோ. கோகுலன் |

**ஆரம்பம்: 03-04-96 பி.ப. 3 மணி**

★ O/L கணிதம் சித்தியெய்த வேண்டியோருக்கான விசேட கணித வகுப்பும் நடைபெறும்.

★ ஆண்டு 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வகுப்புகள் பயிற்சிப் பரீட்சையுடன் நடைபெறும்.

★ அனுமதிகளையும் நேரஅட்டவணையையும் இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

— நிர்வாகி

(41278)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் படையினரின் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டதாம்

கொழும்பு, ஏப். 1
மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை ஒன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

செங்கலடி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவ அணி செங்கலடி— பதுளை வீதி வழியாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயித்திய மலையை நோக்கி முன்னேறுவதாகவும்—

பாரிய எதிர்ப்புக்கள் எதுவும் இல்லை என்றும்— அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்நடவடிக்கை காரணமாக செங்கலடி— பதுளை வீதியில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் நடமாட்டமும் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுணதீவு, படுவான் கரை பகுதிகளை நோக்கி மட்டக்களப்பில் உள்ள மூன்றாம் படைப் பிரிவு முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. (உ-3)

## தனியார் மருத்துவ உரிமம்: வெள்ளிக்கு முன் பெறுக

சாவகச்சேரி, ஏப். 1
யாழ். குடாநாட்டில் இயங்கும் மருத்துவத்துடன் தொடர்புடைய நிறுவனங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை 5 ஆம் திகதிக்கு முன்னர் 1996 ஆம் ஆண்டுக்கான தமது உரிமங்களைப் பெறுமாறு—

தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அறிவுறுத்தி உள்ளார்.

மேற்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் உரிமங்களுக்காகக் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு உரிமக் கட்டணமும், குற்றப்பணமும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதேச, ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள்—

சுதேச, ஆங்கில, ஹோமியோபதி, அக்குபங்சர் சிகிச்சை நிலையங்கள்.—

சுதேச, ஆங்கில மருத்துவ மனைகள், ஆலோசனை நிலையங்கள்.—

மருந்து உற்பத்தி நிலையங்கள், மருத்துவ ஆய்வு கூடங்கள்.—

ஆகியவற்றுக்கான உரிமங்கள் பெறப்படவேண்டும். இது சம்பந்தமான நடவடிக்கைகள், சாவகச்சேரி பணிமனையில் மட்டும் திங்கள் புதன் கிழமைகளில் நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## ஆசிரியர் பதவியுயர்வு பரீட்சை

கொழும்பு, ஏப். 1
இலங்கை ஆசிரியர் சேவையின் மூன்றாம் பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய முதலாம் வகுப்பிற்கு தரம் உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்கு கல்விச் சேவைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இது தொடர்பான விவரக்கள் கடந்த 29 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தாகவும்—

விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் மே மாதம் 15 ஆம் திகதி என்றும் —

கல்விச்சேவைக் குழு தெரிவித்துள்ளது. (உ-3)

## குமரபுரம் படுகொலை:
# 8 ராணுவக் கைதிகளுக்கும் சிறையில் பாதுகாப்பில்லை!
## நீதிமன்றில் விண்ணப்பம்

கிளிவெட்டி குமரபுரம் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள எட்டு இராணுவத்தினரையும் இராணுவக் காவலுக்கு மாற்ற விடுக்கப்பட்ட கோரிக்கை நீதிவானால் நிராகரிக்கப்பட்டது.

திருகோணமலை சிறையில் விளக்கமறியலில் சந்தேக நபர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்றும் —

சந்தேகநபர்கள் அனைவரையும் இராணுவ காவலில் வைக்க இராணுவத்தினரிடம் ஒப்படைக்க அனுமதி வழங்கும்படியும் —

இராணுவ அதிகாரி ஒருவர் சட்டத்தரணி மூலம் மூதூர் நீதிவான் திரு. பி. சுவர்ணராஜிடம் விண்ணப்பம் சமர்ப்பித்தார்.

''திருமலைச் சிறையில் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என உத்தியோக பூர்வமாக எனக்கு அறிவிக்கப்படவில்லை. ஆகவே இந்த விண்ணப்பத்தை ஏற்க முடியாது'' என்று நீதிவான் தெரிவித்தார். [உ-3]

## மந்திகை ஆஸ்பத்திரியில் ஒட்சிசன் முடிவடைந்த நிலை

மந்திகை, ஏப். 1
மந்திகை ஆஸ்பத்திரியில் ஒட்சிசன் முடிவடைந்துள்ளதால் நோயாளர்களின் அத்தியாவசிய வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாகமும், பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு நிர்வாகமும் பலதடவைகள் கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்ட போதிலும், இதுவரை ஒட்சிசன் சிலிண்டர்கள் அனுப்பி வைக்கப்படவில்லை.

ஒக்சிசன் முடிவடைந்துவிட்டதால் இரு வைத்திய சாலைகளின் சந்திரசிகிச்சைப் பிரிவுகளும் சத்திர சிகிச்சைகளைப் பின்போட்டுவருகின்றன.

இதுபோலவே ஏற்புத்தடுப்பூசி மருந்தும் கடந்த இரு வாரங்களாக முடிவடைந்த நிலையிலேயே உள்ளது.

## இடம்பெயர்ந்து வந்த
# நூறு விவசாயிகளுக்கு கிளிநொச்சியில் கடனுதவி

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்பில் வாழும் விவசாயிகளுக்கு உதவும் வகையில், கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தின் சமூக பொருளாதார குழுவால் இனங்காணப்பட்ட நூறு விவசாயிகளுக்கு கடனுதவித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

தற்போது உப உணவுப் பயிர்ச்செய்கையில் கால் ஏக்கருக்கு குறையாமல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பயனாளிகளில் இருந்து இவர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஒருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா, மூன்று மாதம் முதல் நான்கு மாத கால மீளளிப்பு அவகாசத்துடன் கடனாக வழங்கப்படுகிறது.

மக்களின் நலன் கருதி மக்கள் நலன்காக்கும் பிரிவின் கிளை அலுவலகம் ஒன்று சிவிக் சென்ரர், வட்டக்கச்சியில் இயங்கிவருகிறது. (இ-3)

# தமிழர்கள் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் - சந்திரிகா

தமிழர்கள் தமதுபிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தமக்குள் தெளிவான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும், தமிழ்மக்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கேட்டுள்ளார்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்ட கருத்தை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தொடர்ந்தும் சண்டையிடத் தேவையில்லை. அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்துள்ளது. கருத்தொருமைப்பாடு, நல்லிணக்கம் ஆகியவற்றின் மூலம் சமாதானத் தீர்வு காணப்படவேண்டும்.

தற்போதைய அரசாங்கம் சரியான திட்டம் ஒன்றுக்கு அமைய வடபகுதி யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் பணியில் படையினரை ஈடுபடுத்தியிருக்கிறது.

இந்த முயற்சி வலிகாமத்தில் குறுகிய காலத்துக்குள் பயன் அளித்தது என்றார்.


# முக்கிய அறிவித்தல்

சேரன் பல்பொருள் வாணிபமாகிய எமது ஸ்தாபனத்தின் நிதியாண்டு **31 - 03 - 96** உடன் முடிவு பெறுவதனால் கீழ்க் குறிப்பிட்டுள்ள கடன்படுநர்கள் **04 - 04 - 96** இற்கு முன்னதாக எம்மைச் சந்தித்து நிலுவைகளை உறுதிப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

| | | |
|---|---|---|
| க. ஜெயகாந்தன் (ஏ. ஜி. எண்ணைக்கடை) | கல்வியங்காடு | 15,41,585 . — |
| அன்னராசா களஞ்சியம் | யாழ்ப்பாணம் | 54,000 . — |
| இராமையா செட்டியார் | யாழ்ப்பாணம் | 2,45,943 . 50 |
| யோகராசா | கோண்டாவில் | 66,000 . — |
| ராஜ் எரிபொருள் நிலையம் | திருநெல்வேலி | 2,91,785 . — |
| சு. பாலகுமாரன் | கந்தர்மடம் | 4,37,259 . — |
| பிள்ளையார் களஞ்சியம் | யாழ்ப்பாணம் | 10,98,309 . — |
| நியூ வசந்தா களஞ்சியம் | கல்வியங்காடு | 3,91, 244 . 50 |
| தீபன் களஞ்சியம் | திருநெல்வேலி | 20,730 . — |
| ஜெயதுர்க்கா | மானிப்பாய் | 1,30,278 . — |
| கண்ணன் ஸ்ரோர்ஸ் | திருநெல்வேலி | 8,15,713 . 91 |
| விநாயகர் களஞ்சியம் | அச்செழு | 37,796 . — |
| திருப்பதி ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 1,63,606 . — |
| நாகராஜன் | யாழ்ப்பாணம் | 26,579 . — |
| சிவஞானம் சிமியோன் | இருபாலை | 14,222 . 50 |
| ராஜா களஞ்சியம் | கோண்டாவில் | 42,440 . 50 |
| செல்வரட்ணம் (திருப்பதி) | அரியாலை | 29,685 . 50 |
| மணியம் களஞ்சியம் | திருநெல்வேலி | 77,415 . 50 |
| எஸ். ரீ. ஆர். சன்ஸ் | | 1,26,162 . 50 |
| புஸ்பா களஞ்சியம் | அரியாலை | 38,686 . 50 |
| பிரபா பல்பொருள் வர்த்தக நிலையம் | உரும்பிராய் | 35,089 . 14 |
| ராஜ்குமார் | ஏழாலை | 89,528 . — |
| வே. சி. மணியம் | மானிப்பாய் | 56,190 . — |
| அருள் (ஐங்கரன்) களஞ்சியம் | திருநெல்வேலி | 21,604 . 50 |
| செந்தாமரை | யாழ்ப்பாணம் | 1,73,662 . — |
| அனுதினம் மருந்தகம் | சின்னக்கடை | 13,608 . — |
| நல்லை தொழிலகம் | இணுவில் | 11,856 . 10 |
| செல்வம் வர்த்தக நிலையம் | அச்செழு | 35,000 . — |
| எஸ். வி. முருகேசு | யாழ்ப்பாணம் | 29,73,128 . 50 |

பணிப்பாளர்,
சேரன் பணிமனை.

(சி/4157)



சிவமயம்





# பங்குனி உத்தர பெருவிழா

கிளிநொச்சி மாவட்டம்
வரலாற்றுப் பெருமை மிக்க உருந்திரபுரம்
உருத்திரபுரீச்சரம் அருள்மிகு உருத்திரபுர நாயகி சமேத உருத்திரபுரீசுவரர் ஆலய

## பங்குனி உத்தரப் பெருவிழா விஞ்ஞாபனம்

சிவனடியார்களே,

எம்பெருமான் உமாதேவியாரை திருமணம் செய்த நாளாகியதும், சம்பந்தப்பெருமானால் ''உத்தர விழா காணாது போதியோ பூம்பா வாய்'' என்று சிறப்பாகத் திருமுறையில் இடம்பெற்றதாகிய பெருவிழா மேற்படி கும்பாபிஷேகத்தின் பின் உருத்திரபுரீசுவரர் ஆலயத்தில் இம்முறை வெகுசிறப்பாக நடைபெற திருவருள் கூடியுள்ளது. மேற்படி தினம் யுவ வருடம் பங்குனி மாதம் 20 ஆம் நாள் (**02- 04- 1996**) செவ்வாய்க்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் விஷேட அபிஷேகம் தொடர்ந்து சோடச உபசார பூசையும் நடைபெற்று 12.00 மணியளவில் எம்பெருமான் வீதிவலம் வரும் காட்சியும் நடைபெறும். சிவனடியார்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரேயொரு வரலாற்று பெருமைமிக்க இச் சிவாலயத்திற்கு வருகை தந்து எம்பெருமான் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

★ அடியார்கள் பால், தயிர், இளநீர், பூமாலைகள், பூக்களை நேரகாலத்துடன் ஆலயத்திற்கு அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

'' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம் ''.

இங்ஙனம்,
உருத்திரபுரீச்சரம் பரிபாலனசபை
உருத்திரபுரம்.

[C/4150]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவிக்கப்பட்ட (இறக்குமதி செய்த) லொறி பற்றறிகள் விற்பனைக்குண்டு. நல்லூர் ப. நோ. கூ. சங்கம், கைதடி. (சி-4151)

### தேவை

ஹோர்லிக்ஸ், வீவா, ஜாம் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும். சோழன் வெற்றுப்பொருள் [வாணிபம், யாழ்சாலை, சாவகச்சேரி. (41274)

வெற்று பியர் போத்தல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு கொள்ளவும். சத்தியா மதுபானச்சாலை, விக்கினேஸ்வரா களஞ்சியம் அருகில், கண்டி வீதி, சாவகச்சேரி. (41140)

### வாடகைக்கு

பொருள்கள் [வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்கிறீம் கப்ஸ். பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர் றே, கறி வாளிகள், கறிடிஸ்கள், பந்திப்பாய், கிடாரங்கள், சமையல்பாத்திரங்கள், தண்ணீர் பரல் இன்னும்பல. வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (41147)

### பொது அறிவு

பொதுப்பரீட்சைகளுக்குரிய நூல்கள் - பொது அறிவு, பொது உளச்சார்வு, நுண்ணறிவு, கிரகித்தல்-25 சதவீதக் கழிவுடன் பெற. கலாநிதி க. குணராசா, கமலாம்பிகை நூல் வெளியீட்டகம், 10, மகளிர் கல்லூரி வீதி, சாவகச்சேரி. (41109)

### உணவுப் பார்சல்கள்

ஜெசித்தாராவின் உணவுப் பார்சல்கள் தினமும் பிற்பகல் 12-00 மணி முதல் 3-00 மணி வரை. உங்களுக்கு அடக்கமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஜெசித்தாரா, (தேசியசேமிப்பு வங்கி முன் ஒழுங்கை), கண்டி வீதி, சாவகச்சேரி. (41264)

### O/L DEC'95

அரசாங்கத்தால் டிசம்பர் 95இல் நடத்தப்பட்ட O/L வினாத்தாள்கள் விடைகளுடன் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். வெளியீடு: Bond, த, பெ. 140, யாழ்ப்பாணம். (41143)

### அச்சக மெஷின்

பிளேடின் மெசின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தயா அச்சகம், (மில்க்வைற் கம்பனி அருகாமை), மீசாலை சந்தி, அல்லாரை வீதி, மீசாலை. (41262)

### வெற்றுப் போத்தல்

வெற்று வெள்ளை சாராயப் போத்தல் (முழுப் போத்தல், அரைப் போத்தல்) கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: உணவு எண்ணெய்க் கம்பனி, யாழ். வீதி புளியங்குளம். [41132]

## வீரச்சாவு

சாவகச்சேரி, ஏப். 1

கடந்த 24ஆம் திகதி ஏறாவூர் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் லெப்டினன்ட் லிங்கேஸ்வரன் [செல்லத்துரை ராஜகாந்தன் — அம்பாறை] என்ற போராளி வீரமரணமடைந்தார். (இ-3)

---

## யாழ். கல்வி நிறுவனம்

**JAFFNA TUITION CENTRE**

[நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி]

**O/L**

O/L பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான விசேட வகுப்புகள்.

**விக்னா ஆசிரியர் குழு**

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | — திரு. J. R. சூரி, — J. J. கொலின்ஸ் |
| கணிதம்: | — திரு. தயாளன் |
| சமூகக்கல்வி: | — திரு. கோபி |
| ஆங்கிலம்: | — திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — திரு. பிரதீபன், திருப்பதி |
| வர்த்தகமும்: கணக்கியலும்: | — திரு. கருணாகரன் |
| சமயம்: | — திரு. சங்கர் |
| கிறிஸ்தவம்: | — திரு. டார்வின் |

**ஆரம்பம்: 03-04-1996**

ஆண்டு 9. 10 க்கான அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.

**A/L** கலை, வர்த்தகம்

விக்னா ஆசிரியர் குழுவால் போதிக்கப்படுகிறது. மாணவர்கள் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**யாழ். கல்வி நிலையம்**

**JAFFNA TUITION CENTRE**

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (41273)

---

உ

இணுவில், திருவருள் மிகு சிவகாமி அம்மன் கோவில்

## தேர்-தீர்த்தம்

இன்று (01 — 04 — 96) திங்கள் தேர்
(02 — 04 — 96) செவ்வாய் தீர்த்தம்

இடம் பெயர்ந்து அல்லல் படும் மக்கள் அம்பிகையின் அருளோடு தமது இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல மேற்படி தினங்களில் அன்னையை பிரார்த்திப்போமாக!

அம்பிகை அடியார்கள்

(41276)

---

**இன்று முதல்!**

சுண்டுக்குளி - ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சாவகச்சேரி

(தேசிய சேமிப்பு வங்கி முன் ஒழுங்கை)

பல வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க **01 - 04 - 1996** நண்பகல் 12-00 மணி முதல் தனது வழமையான சேவையை வாடிக்கையாளருக்கு வழங்கவிருக்கின்றார் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றார்.

உங்களது சீன, கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகளுக்கு உங்கள் குடும்பத்துடன் நீங்கள் நாடவேண்டிய இடம்

**ஜோ. எகட்டனின்**

**ஜெசித்தாரா**

(தேசிய சேமிப்பு வங்கி முன் ஒழுங்கை)

கண்டி வீதி, சாவகச்சேரி.

**புது யுகத்தில் புது உருவம்**

ஜெசித்தாரா

எமக்கு வேறு கிளைகளோ, முகவர்களோ கிடையாது.


அம்புக்குறிகள் வழி காட்டும்

(41263)

---

# நினைவலைகள்

## 14-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 09 — 1912

மறைவு: 14 — 03 — 1982

அமரர்

**பொ. கணபதிப்பிள்ளை** (நடுவில்)

சமாதான நீதிவானும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் உடுப்பிட்டி

திதி: **8 - 4 - 1996**

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 02 — 1956

மறைவு: 28 — 03 — 1991

திருமதி

**சரோஜினி ஞானபண்டிதர்**

சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் உடுப்பிட்டி

திதி: **1 — 4 — 1996**

மறைந்தும் மறையாதும் மனங்களில் நிறைந்து விளங்கும் உத்தமர்களே!
உறையாத நினைவுகளை உள்ளகத்தே விதைத்து
நிறைவோடு பசுமை நினைவுகளை நெஞ்சகத்தே விரித்த உத்தமர்களே!
இறைஞ்சுகிறோம் உங்கள் ஆத்மா சாந்திக்காக.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அம்மா, அண்ணாமார், அக்கா, தங்கை, பெறாமக்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள்.

கரணவாய் வடக்கு, உடுப்பிட்டி. (40382)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## யாருக்கு தெளிவு தேவை?

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, தமிழர்களும் அவர்களின் அரசியல் தலைவர்களும் ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு கேட்டிருக்கிறார்.

அவரது இந்தக் கருத்து மிகவும் விசித்திரமானது; அர்த்தமற்றது; வம்புத்தனமானது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமது பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் அவர்கள்மிகத் தெளிவாகவே உள்ளனர்.

அது குறித்து அவர்கள் 1977ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற தேர்தலின் போதே தமது நிலையை மிகத் தெளிவாகக் கூறிவிட்டனர்.

தங்களது பாரம்பரிய தாயகமான வடக்கு -கிழக்கு மண்ணில், தங்கள் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் தக்க நிறைவான தன்னாட்சி உரிமை வேண்டும். தமது இறைமையும், ஆட்சி உரிமையும் தம்மிடமே இருக்கவேண்டும். அவற்றில் வேறு எவரும் தலையிடவோ சீண்டவோ கூடாது.

தமிழர்கள் தமது இந்த நிலைபபாட்டை கடந்த இருபது வருடங்களில் எப்போதும்— இதுவரை — மாற்றியதில்லை. அப்படி மாற்றும் உத்தேசமும் இல்லை.

இந்த நிலைப்பாடு சந்திரிகாவுக்குத் தெரியாததா? அப்படியிருக்க அவர் இப்படி ஒரு கேள்வியை எழுப்பியது ஏன்?

தாம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து தமிழர்களின் நிலைப்பாட்டை அவர் அறிய விரும்புகிறாரா?

தமிழர்கள் தெளிவுபடுத்திய தமது நிலைப்பாட்டில், அவர்களின் எதிர்பார்ப்பில் நூறில் ஒரு வீதமாவது சந்திரிகாவின் திட்டத்தில் இல்லை.

அப்படியிருக்க அந்தத் திட்டம் குறித்து நிலைமையைத் தெளிவுபடுத்துமாறு சந்திரிகா கேட்பதற்கு அவருக்கு என்ன பாத்தியதை உண்டு?

தமிழர்களைத் தனித்தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளாத, அவர்களின் சுயநிர்ணய உரிமையையும், தமிழர் தாயகத்தையும் அங்கீகரிக்காத, அதில் தன்னாட்சி உரிமை வழங்காத எந்தத் தீர்வையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

தமிழ் மக்களின் இந்த நிலைப்பாடு குறித்து சந்திரிகாவுக்கு மயக்கம் ஏற்பட வேண்டியதில்லை. கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் இதுவிடயத்தில் ஆப்பிழுத்த குரங்குகள் போல அகப்பட்டுக் கொண்டு, எதுவும் செய்ய முடியாமல் திண்டாடுகின்றன. அந்தத் தள்ளாட்டத்தைக் கண்டு சிலவேளை சந்திரிகாவுக்கு மயக்கம் வந்திருக்கலாம்.

உண்மையில் இது விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டை சொல்ல வேண்டியவர் சந்திரிகாவே.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வா, இராணுவத் தீர்வா என்பதனையும்—

தமிழர்கள் தெளிவுபடுத்தியவாறு பிரச்சினையைத் தீர்க்கும் உத்தேசம் தமக்கு உண்டா என்பதனையும்— அவரே தெளிவாக்க வேண்டும்.

போக்குவரத்து

## கண்காணிப்புப் பிரிவுடன் உடன் தொடர்பு கொள்க!

சாவகச்சேரி, ஏப். 1

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளோரில் ஒரு தொகுதியினரின் பெயர்ப்பட்டியல் அண்மையில் உதயனில் வெளியாகியிருந்தது. மற்றொரு தொகுதியினரின் பெயர் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.

இவர்களில் இடம்பெயர்ந்து வன்னி, முல்லை, மன்னார்ப் பிரதேசங்களில் தற்காலிகமாக வசிப்போர் கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் விசாரணைப் பகுதிச் செயலகத்துடனும், தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் வசிப்போர் சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு முன் புறமாக உள்ள விசாரணைப்பகுதிச் செயலகத்துடனும் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரினதும் பெயரும் அதன் பின்னர் அவர்களின் நிரந்தர விலாசமும் தொடர்ந்து அடைப்புக்குள் அவர்களின் தற்காலிக முகவரி, குடும்ப அட்டை இலக்கம் ஆகியனவும் பிரசுரமாகியுள்ளன.

★ நாகலிங்கம் சிவலிங்கம் — அன்னங்கை, உரும்பிராய் மேற்கு, கோண்டாவில். (00102630264)

★ செல்வராசா யோகேஸ்வரி — புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம். (சங்கர் இல்லம், மானிப்பாய் வீதி, உடுவில்.) (00082080084)

★ தம்பிராசா ஸ்ரீபாலசிங்கம் — காளிகோவிலடி, ஏழாலை வடக்கு. (00082050557)

★ பொன்னுச்சாமி வேலு — அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு. (00081850023)

★ திருவம்பலம் சிவராசா — 'மணிவாசா' கந்தரோடை. (000820001332)

★ வைரமுத்து பொன்ராசா — கந்தரோடை. (00082000387)

★ பற்றிக் அரசநாதன் — டச்சு வீதி, உடுவில் வடக்கு. (00081860393)

★ முருகேசு பாலசிங்கம் — சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (00081820428)

★ வல்லிபுரம் சிவசுப்பிரமணியம் — பெரியதம்பிரான் வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (000128590274)

★ செல்லையா புஸ்பராசா — காளிகோவிலடி, தாவடி வடக்கு. (00081930052)

★ கார்த்திகேசு சிறிபாலசிங்கம் — இணுவில் மேற்கு. (00081880316)

★ வைத்திலிங்கம் சண்முகராசா — உடுவில் தெற்கு, பாலாவோடை, மானிப்பாய். (00081830185)

★ செல்லத்துரை தவரெத்தினம் — ஐயனார் கோவிலடி, சுன்னாகம். (00081980375)

★ சரவணமுத்து சாந்தலிங்கம் — ஐயனார் கோவிலடி, சுன்னாகம். (00081980373)

★ குமாரசுவாமி உதயகுமாரன் — கந்தரோடை. (00082000501)

★ துரையப்பா இந்திராசன் — களவாவோடை, ஏழாலை தெற்கு. (00082060430)

★ வேணுகோபால் ஜேம் இரத்தினம் — இணுவில் கிழக்கு, (00081900271)

★ பொன்னுத்துரை ரவிமோகன் — உடுவில் தெற்கு, மானிப்பாய். (00081830298)

★ கறுவல் சின்னத்துரை— புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மயிலங்காடு (ஏழாலை தெற்கு, ஏழாலை) (00082070229)

★ நமசிவாயம் குமாரசாமி — மொரக்கிபுரம், காரைநகர் (பனிக்கர் வளவு, திருநெல்வேலி.) (00030420068)

★ யோசப் திரேசம்மா — நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை (புகையிரதநிலைய இடம்பெயர்ந்தோர் இல்லம், யாழ்.) (00030580127)

★ இரத்தினம் இராசையா — புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை. (70/3, அரசடி வீதி, நாயன்மார்கட்டு) (00030600030)

★ ஐயாத்துரை செல்லத்துரை — கரம்பொன் தெற்கு, (சேச் ஒழுங்கை, கல்வியங்காடு, திருநெல்வேலி.) (00030540290)

★ கிறிஸ்ரி விஜயசுந்தரம் சாந்தினி — கிழக்குத் தெரு, ஊர்காவற்றுறை, (யாழ் புகையிரத நிலைய அகதி முகாம்) (00030490017)

★ அன்ரன் விஜயகுமார்— கீதாம்புலம், கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறை, (இல. 39, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.) (00030510266)

★ முத்தையா ஜதீஸ்வரன் — அழகாபுரி, களபூமி, காரைநகர். (ஆஸ்பத்திரி வீதி, மூளாய்.) (00030430131)

★ கறுத்தான் செல்வராசா — தோப்புக்காடு, காரைநகர். (சத்தியக்காடு முகாம், சுழிபுரம்)

★ செல்லையா பாலசிங்கம் —பனிப்புலம், பண்டத்தரிப்பு. (00071760165)

★ பரமசுந்தரம் சகிலா — சரவணை கிழக்கு, வேலணை. (22/4, விதானையார் வீதி, சுண்டுக்குளி.) (00020200023)

★ முருகேசு சண்முகலிங்கம்— சுருவில் வடக்கு, ஊர்காவற்றுறை. (பிரபாகரன் வீதி, அரியாலை.) (00030590049)

★ பரமசுந்தரம் சொர்ணகாந்தன் — ராதா வீதி, வண்ணார்பண்ணை. (00020200375.

★ சண்முகநாதன்கலையரசி — சிவன்கோயில் வீதி, காரைநகர் (இல. 100, மணிக்கூட்டு வீதி, யாழ்.) (00030460030)

★ கணபதிப்பிள்ளை சகுந்தலாதேவி — நீலிப்பந்தனை, காரைநகர். (இல. 39, பிரப்பங்குளம் வீதி, யாழ்.) (00030470465)

★ கதிரவேலு சாந்தகுமார் — தம்பாட்டி, ஊர்காவற்றுறை (சிப்பித்தரை, கொக்குவில்.) (00030560232)

★ கந்தையா ஜெக்குமார் — ஆயிலி, காரைநகர் (கொத்துக்கட்டி றோட், நவாலி, மானிப்பாய்.) (00030480206)

★ இராமு வீரசிங்கம் — வெடியரசன் வீதி, காரைநகர் மத்தி. (சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.) (00030480139)

★ கணபதிப்பிள்ளை குணராசா — தம்பாட்டி, ஊர்காவற்றுறை (அராலி இடம் பெயர்ந்தோர் நிலையம்.) (00030560071)

★ ஐயாத்துரை சிவனேசபிள்ளை — தம்பாட்டி, ஊர்காவற்றை (அராலி இடம் பெயர்ந்தோர் இல்லம்) (00030560002)

(வளரும்)

### தொடர்ந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யளவில் மட்டுவில் அம்மன் கோவிலுக்கு வடமேற்குப் பக்கமாகவும், மிருசுவில் வடக்குக் களித்தரைப் பகுதியிலும் சில ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதற்கிடையில்—

நேற்று முன்தினம் இரவு 9-00 மணிக்கு ஆனையிறவு, வெற்றிலைக்கேணி முகாம் களிலிருந்து பச்சிலைப்பள்ளி பகுதியை நோக்கி ஷெல்வீச்சு இடம்பெற்றது.

(உ -13-15-3)-80-117-173)

# மலையகத்தில் வன்செயல் வெடிக்கும்!

## தொண்டா எச்சரிக்கை

''தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளஉயர்வு வழங்க மறுப்பது, உரிய நாள்கள் வேலை வழங்குவதற்கு மறுப்பது ஆகியன காரணமாக தோட்டத்துறையில் பரவிவரும் அமைதியின்மை வன்செயலாக வெடிக்கலாம்.''

- இவ்வாறு எச்சரித்திருக்கிறார் இ. தொ. கா. தலைவரும், கிராமியகைத்தொழில் அமைச்சருமான திரு எஸ். தொண்டமான்.

''தற்போதுள்ள நிலைமையில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக முழு மலையக சக்திகளையும் எனது தலைமையில் வழி நடத்தவுள்ளேன்'' என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இ. தொ. கா. ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் அடையாள வேலை நிறுத்தம் குறித்து தோட்டங்களுக்கு நேரில் சென்று விளக்கமளிக்க அமைச்சர் தொண்டமான் நேற்று முன்தினம் தமது சகாக்களுடன் மலையகம் சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

மட்டு. போரதீவில்

## அறுவடைக்குச் சென்ற 12 தமிழரைக் காணவில்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவு கிராமத்தில் இருந்து கடந்த 15 ஆம் திகதி வேளாண்மை அறுவடைக்குச் சென்ற 12 தமிழர்கள் பற்றி தகவல் ஏதும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தமிழர்கள் பற்றிய விவரத்தை தருமாறு மட்டக்களப்பு எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையிடம் கேட்டுள்ளார்.

கூலித் தொழிலாளிகளான இந்த 12 பேரும் வெலிகந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அரணகலவில பொலீஸில் ஒப்படைக்கப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிப்பதாகவும்—

ஆனால் இவர்கள் குறித்து மேலதிக தகவல் எதுவும் தெரியவரவில்லை என்றும்—

வெலிகந்தை, அரணகல பொலீஸ் அத்தியட்சகர்கள் தமது பகுதியில் இவர்கள் கைது செய்யப்படவில்லை எனக் கூறியுள்ளார் என்றும்—

இவர்கள் குறித்த விவரத்தை பெற்றுத்தர ஏற்பாடு செய்யுமாறும்—

அவர் அனுருத்தவிடம் கேட்டுள்ளார். [உ-3]

### 21 வேங்கைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யவள் (ராசமலர் ராசலிங்கம் — திருகோணமலை)

★ லெப்டினன்ட் சேணல் நிமல் (பரமநாதன் இளங்கோவன் — வல்வெட்டித்துறை)

★ லெப்டினன்ட் சேணல் எழில்வண்ணன் அல்லது குணேஸ் (சிவலிங்கம் முரளிதாஸ் — அம்பனை)

★ மேஜர் கனியன் (திருஞானசம்பந்தர் விக்கினேஸ்வரன்—பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)

★ மேஜர் மன்னவன் (சந்தியாப்பிள்ளை ஜூட் ராஜ்குமார் — ராசாவின் தோட்டம்)

★ மேஜர் செம்மலை (மரியநாயகம் இருதயராஜ்—நெடுந்தீவு)

★ மேஜர் மோகன் (சிவபாலு பாஸ்கரன் — தாளையடி)

★ மேஜர் மலர்மொழி (அகிலமலர் குழந்தைவடிவேல் — யாழ்ப்பாணம்)

★ கப்டன் இராவணன் (இம்ரான் பாண்டியன் படையணி, விமான எதிர்ப்புப்பிரிவு)

★ கப்டன் கரன் (சந்திரசேகரம் தர்ம கண்ணன்— நாகர்கோவில்)

★ கப்டன் நல்லவன் (கோவாம்பிள்ளை பூபாலசிங்கம் — மட்டக்களப்பு)

★ கப்டன் மிதுனன் (கறுப்பையா பாலகிருஷ்ணன்— மூதூர்)

★ கப்டன் கனகா (சர்மிளா பத்திமனோகரன்— விசாவிளான்)

★ லெப்டினன்ட் குமுதினி (ஆனந்தசோதி தாண்டவம்— கண்டி)

★ லெப்டினன்ட் மிருந்தா (நிமலாவதி பரமசாமி— காரைநகர்)

★ லெப்டினன்ட் செல்வக்குமார் (முருகையா விஜயராஜ் — பூநகரி)

★ லெப்டினன்ட் கீதா (சுதர்சனா ஆரோக்கியநாதர்— குருநகர்)

★ லெப்டினன்ட் மகேஸ்வரி (ரேவதி ராசகுரு— ஊரிக்காடு)

★ லெப்டினன்ட் எழுமதி (கலிஸ்ரா இம்மானுவேல் — ஊர்சாவற்றுறை)

★ கப்டன் திருமாறன் (தெய்வசீலன் டன்சன் — மண்டைதீவு)

மேஜர் கனியன், மேஜர் மன்னவன், லெப்டினன்ட் செல்வக்குமார், லெப்டினன்ட் எழுமதி, திருமாறன் ஆகியோரின் குடும்பத்தினரை அல்லது உறவினர்களை சாவகச்சேரியில் உள்ள மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-3)

### மூப்பனார் அணி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று கூட்டாக செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

தற்போது அமெரிக்கா சென்றிருக்கும் நடிகர் ரஜனிகாந்த் தம்முடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்தக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்ததாக கருணாநிதி அறிவித்தார்.

மூப்பனார் அணியினர் பிரதமர் நரசிம்மராவின் முடிவுக்கு மாறாக பிரிந்து சென்றிருப்பது அகில இந்திய அளவில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிவாய்ப்புக்களைக் குறைத்துள்ளதோடு நரசிம்மராவ் அவர்களது தலைமையையும் பலவீனப்படுத்தியுள்ளதாக அரசியல் நோக்காளர்கள் கருத்து வெளியிட்டனர்.

தனியாகப் பிரிந்து சென்றுள்ள மூப்பனார் அணிக்கு ''தமிழக காங்கிரஸ்'' எனப் பெயர் சூட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழக சட்டசபையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், மூப்பனார் அணியில் உள்ளார்.

மூப்பானாரின் நிலைப்பாட்டை ஆதரித்து வந்த மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரம், அருணாசலம் ஆகியோர் புதுடில்லி சென்றுள்ளனர். அவர்கள் அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு மூப்பனார் அணியில் இணைந்து போட்டியிடுவார்களா? என்பது இன்னும் ஊர்ஜிதமாகவில்லை. (உ-3-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பங்குனி உத்தர விழா

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகரை நினைவுகூர்ந்து நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் **2-4-96** செவ்வாய் காலை 8 மணி முதல் 10 மணி வரை சங்காபிஷேகம், விஷேட பூஜை ஆராதனை நடைபெறவுள்ளது.

இங்ஙனம்:
விழா உபயகாரர்
சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
பிரதமகுரு, (புன்னாலைக்கட்டுவன்)
மருதடி விநாயகர் தேவஸ்தானம்,
விளைவேலி - நுணாவில் மேற்கு. (41149)

## மரண அறிவித்தல்கள்

### G.S. மரியநாயகம்
(முல்லைத்தீவு)

பிரபல வர்த்தகரும், சென் பீற்றேர்ஸ் ரான்ஸ்போர்ட் உரிமையாளரும் முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட சபைத் தலைவரும் ஆகிய G.S. மரியநாயகம் 28 – 03 – 96 அன்று நீர்கொழும்பில் காலமானார்.

இவர் பிரபல சம்மாட்டியார் செபமாலை, மரியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், மயிலிட்டி பிரபல வர்த்தகர் அ. அ. பேதுறுப்பிள்ளை, லூர்து அம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பற்றிமாராணியின் அன்புக் கணவரும், சதீஸ் (டென்மார்க்), றமேஸ் (சுவிஸ்), தபோ (அவுஸ்திரேலியா), சோபா (சுவிஸ்), லோஜா, லின்டா, டினேஸ் (லண்டன்), சுதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 31 – 03 – 96 மாலை நீர்கொழும்பு கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெற்றது.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
அ. பே. தேவதிரவியம்,
(மைத்துனர்)
ஆசீர்வாதம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

முகவரி;
குணம் குளிர்களி அசம்.
துறைமுக வீதி,
பருத்தித்துறை.

(40404)

### தம்பு சரவணமுத்து
(முன்னாள் O.A)

சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுவிலை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான தம்பு சரவணமுத்து அவர்கள் 31- 3- 96 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் திலகவதியின் அன்புக் கணவரும், சிறிஸ்கந்தன் (பாபு - சுவிஸ்), கமலாசினி (கனடா), சிறீதரன் (பபா – ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி (சுவிஸ்), ரவீந்திரன் [கனடா], ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்னபூரணம் [பூரண பவனம்], காலசென்ற தையல்நாயகி, காலஞ்சென்ற அரியரத்தினம் (S.M) ஆகியோரின் சகோதரரும், ஆலாலசுந்தரம் (சிறாப்பர்), காலஞ்சென்ற தனலஷ்மி – மூர்த்தி, சச்சிதானந்தன், காலஞ்சென்ற தாட்சாயினி - சிவஞானம், ரங்கநாதன் [சுகாதாரப் பரிசோதகர்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 31-3-96 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3. 00 மணியளவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ரவிராஜசிங்கம்
(மருமகன்)
பூரண பவனம்,
கண்டி றோட்,
சாவகச்சேரி.

பழைய விலாசம்:-
திலக மகால்,
உடுவில்,
சுன்னாகம்.

(41148)

### திருமதி செல்லையா நேசம்மா

கொக்குவில், தலையாழியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லையா - நேசம்மா திருநகர், கிளிநொச்சியில் 30- 3- 96 அன்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற அருணாசலம் செல்லையாவின் அருமை மனைவியும், திருமதி கருணைசோதி, சிவகுமாரன் (ஜேர்மனி), சத்தியகுமாரன், சிவாஜினி, திருமதி சிவசொரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசரெத்தினம், இந்துராணி [ஜேர்மனி], வஜந்திமாலா [ஆசிரியை புனிதமரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்], திருலோகச்சந்தர் [கணித விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம் – கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவா, சுதர்சன், டீல்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற நவரெத்தினத்தின் [புகையிரத நிலைய அதிபர்] அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநகர் கிளிநொச்சியில் 31-3-96 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சத்தியகுமாரன் (அம்புலி)
[மகன்]

இல 11I, படித்தமகளிர்
குடியேற்றத்திட்டம்,
மிருசுவில்.

[41280]

## 'ஹபரண' வந்தது

வடமராட்சி, ஏப்: 1

நேற்று பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த 'ஹபரண' கப்பலில் **யாழ். போதனா வைத்தியசாலை, பிராந்திய சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுக்கான மருந்துப் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.**

விசர் நாய்த் தடுப்பூசி, ஏற்புத்தடை ஊசி மருந்து ஆகியனவும் எடுத்து வரப்பட்டுள்ளன.

கொழும்பு சென்றிருந்த யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையிலான குழுவினரும், தொண்டர் அமைப்பு பிரதிநிதிகளும் இக் கப்பலில் வந்துள்ளனர்.

(உ-15-173)

### படை..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கோள் காட்டி ரோய்ட்டரும் இத்தகவலை வெளியிட்டன.

எதிர்வரும் தமிழ் — சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழித்து விடுவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூறியதையும் அச் செய்தி நிறுவனங்கள் நினைவூட்டின.

"ஆனால் வடபகுதியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட தரைவழி இராணுவ நடவடிக்கையை இராணுவத் தயாரிப்பு வேலைகள் பூர்த்தியடையாததால் ஒத்திப் போடுவது என முடிவு எடுக்கப்பட்டுவிட்டதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்குப் பதிலாக கடந்த டிசம்பரில் கைப்பற்றப்பட்ட வலிகாமம் பகுதியில் புதிய படை நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது." — என்று பி. பி. ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

"வடக்கில் திட்டமிடப்பட்ட தரைவழி இராணுவ நடவடிக்கை புத்தாண்டுக்குப் பின்னர் வரை ஒத்திப் போடப்படலாம் என புலனாய்வுத் துறையினர் இப்போது கூறுகின்றனர்." — என்றும் அவர் குறிப்பிட்டார்.

"உத்தேசிக்கப்பட்ட படை நடவடிக்கை புத்தாண்டுக்கு முன்னர் வடமராட்சியிலோ, தென்மராட்சியிலோ நடைபெறாது. அதற்குப் பதிலாக வலிகாமத்திலேயே நடவடிக்கை இடம்பெறும் என்று இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. அந்த நடவடிக்கைக்கு 'சூரியப் பிரகாசம் – 5' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது." —
என்று இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

"வலிகாமத்தை சுத்திகரிக்கும் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது என்றும்—
வலிகாமத்தில் புலிகளின் அச்சுறுத்தல் இல்லாத நிலை ஏற்படும் வரை அந்த இராணுவ நடவடிக்கை தொடரும்" என்றும்—
இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்றிரவு ரோய்ட்டருக்கு தெரிவித்தார். (உ-3-6-7-8)

### கரும்புலிகளால்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதலில் 'டோறா' படகு மூழ்கடிக்கப்பட்ட அதே வேளை, ஏனைய கடற்படை கலங்களும் பாரிய சேதத்துக்குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரம் கடலில் நடைபெற்ற இச் சமரில் ஸ்ரீலங்கா கடற்படைக்கு உதவியாக எம்.ஐ. 24 ரக ஹெலிகொப்டர்களும் [illegible] விமானங்கள் போன்றவையும் தாக்குதல் நடத்தின.

(உ-3-6-7-8)

## வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்க நடவடிக்கை

சாவகச்சேரி, ஏப். 1

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான மரக்கறி வகைகளை உற்பத்தி செய்ய வீட்டுத்தோட்டங்களை ஊக்குவிக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டுக்கு 19 ஆயிரத்து 260 மெற்றிக் தொன் மரக்கறிவகைகள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாயச் செய்கையின் படி 3 ஆயிரத்து 853 மெற்றிக் தொன் மரக்கறி வகைகளே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே மேலும் தேவையான 15 ஆயிரத்து 427 மெற்றிக் தொன் மரக்கறியை பெறுவதற்கு மாற்று வழிகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

நீர் கிடைக்கும் இடங்களின் விட்டுத் தோட்டக்களை மேற்கொள்ள ஊக்குவித்தல் உட்பட விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை வழங்குவது குறித்து செயலகத்தில் நடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது. (இ-3)

### அரசியல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டது.

இதன் விளைவாக வலிகாமத்தின் பெரும்பகுதி இன்னமும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

அவர்கள் பெருவாரியான ஆயுதங்களையும் கைவசம் வைத்திருக்கின்றனர். வலிகாமத்தின் மேற்கு, வடக்குப் பகுதிகளில் தாம் நினைத்த வேளை படையினர் மீது தாக்குதல் நடத்தும் சக்தி அவர்களிடம் இருக்கிறது.

மல்லாகத்தில் புதிதாக இராணுவத்தில் சேர்க்கப்பட்ட பதினெட்டுச் சிப்பாய்கள் கொலை செய்யப்பட்டது மேலோட்டமான நோக்குடன் நடத்தப்பட்ட 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கையின் பெறுபேறேயாகும்.

வலிகாமத்தின் மேற்கு, வடக்குப் பகுதிகளில் ரோந்து செல்வதற்கு முன்னர் வீதிகளை துப்புரவு செய்வதற்குக் கூடச் சிப்பாய்களுக்குத் துணிவில்லையா?

இந்திய இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு பலமுனை — பலவழித் தாக்குதலை நடத்தியதோடு மட்டுமன்றி—

அதன் பின்னர் தொடர்ந்தும் துப்புரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. ஸ்ரீலங்கா இராணுவம் அது குறித்துச் சிந்திக்காதது ஏன்?—

இவ்வாறு லோட் புடால் என்ற பாதுகாப்பு ஆய்வாளர் "வீக்கென்ட் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் எழுதியுள்ளார். (அ)

### மட்டு மயிலங்கரை..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஏனைய படையினர் தப்பியோடிவிட்டனர்.

தமக்கு எதுவித சேதமுமின்றி விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதலில் பின்வரும் ஆயுதங்களை அவர்கள் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது:–

ஏ. கே. எல் எம். ஜி. — 1, ஏ.கே. ரகத் துப்பாக்கி — 2, ஏ.கே. எல். எம். ஜி. மகஸின் — 3, கைக்குண்டு — 4, ஐ. எம். ரவைகள் லிங்குடன் — 250, ஏ. கே. மகஸின் — 5, ஐ. எம். ரவைகள் — 400.

(உ-3-7)

## வீரவணக்கம்

### கடற்புலி கனகா
(பத்திமனோகரன் ஷர்மிளா—பலாலி)

30 - 03 - 96 இல் வெற்றிலைக் கேணிக் கடலில் காங்கேசன்துறையில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா படையினருக்கு ஆயுதங்களும், உணவு வகைகளும் ஏற்றி வந்த கப்பலுக்கு உதவி வழங்கி வந்த கடற்படை ரோந்து அணியுடன் ஏற்பட்ட மோதலில் கடற்புலி கனகா வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக் கொள்ளவும்.

க- பத்திமனோகரன
ராஜு (சித்தப்பா)
குடும்பத்தினர்
பலாலிச் சந்தி.

த. முகவரி:
பழைய பொலீஸ் நிலையம்,
பருத்தித்துறை.

(40405)

## மரண அறிவித்தல்

### முத்தர் வீரகத்தி (கந்தையா)
(புகையிலை வர்த்தகர்)

மிருசுவில் ஒட்டுவெளியை சேர்ந்த மு. வீரகத்தி நேற்று [31-03-96] காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்தர் - மயிலாத்தை தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் மாணிக்கம் ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பையா மற்றும் அன்னப்பிள்ளை, சரஸ்வதி, பரமநாதன் [கிளிநொச்சி], சந்திரசேகரம், சிவயோகம், பாலசிங்கம், மாசிலாமணி (கனடா), தெய்வேந்திரம், சிவபாக்கியம், ஜெயலக்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கந்தையா [ஆசிரியர்], ஐயாத்துரை, சரஸ்வதி, உலகேஸ்வரி, யோகராணி, சிவலிங்கம், நடராசா, சந்ரமதி, ஜெயந்தி, [கனடா], சாந்தினி, பாலசுப்பிரமணியம் [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலசிங்கத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [01-04-96] திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வீ. பாலசிங்கம்
[மகன்]

ஒட்டு வெளி,
மிருசுவில்.

(41302)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 01-04-96 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org